தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் சரியானதாக தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரிசீலிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம் பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்.

1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.5.1 பெற வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதியத்தின் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரைப்பட தயாரிப்பு கடன், திரையரங்கு கடன் மற்றும் கொவிட்-19 திரையரங்கு கடன் அடங்கலாக மொத்தம் ரூபா 71,375,384 தொகை 05 வருடங்களைத் தாண்டிய கடன் மீதி ரூபா 71,024,268 ஆக இருந்ததுடன், இதில் ரூபா 64,602,413 தொகையானது 20 வருடங்களைத் தாண்டி இருந்தது. கைத்தொழில்	உற்பத்திக் கடன்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு இணங்க வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், விடயப்பரப்பிற்குரிய அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்த வழக்குத்	நிலுவையிலுள்ள பழைய மீதிகளை அறவிடுவதற்குத் துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

	சரிவடைதல், முகாமைத்துவம் கடன்களை அறவிடுவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்காமை போன்ற நிலைமையின் மீது அத் தொகையை அறவிட முடியாமலிருந்தது. மொத்த கடன் பெற வேண்டிய கடன் மீதியான ரூபா 67,177,716 இன் 94 சதவீதமான ஐயக்கடன் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது கடந்த ஆண்டு கணக்காய்வு விசாரணையின் மூலம் இதுபற்றி சுட்டிக் காட்டப்பட்டது. ஆனால் மீளாய்வு ஆண்டில் நடைபெற்ற நிர்வாக சபை கூட்டத்திலும் இந்த அறவிடப்படாத கடனை அறவிடுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தாக்கல் செய்தல்கள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இத்திரைப்படங்கள் அனைத்தும் 35mm தொழில்நுட்பத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது நவீன தொழில்நுட்பத்துடனான திரையரங்குகள் மேம்படுத்தப்பட்டுள்ளமையினால் இந்தப் பழைய திரைப்படங்களைத் திரையிட முடியாமல் போயுள்ளது. இது தொடர்பாகக் கடன் குழுவிற்குச் சமர்ப்பித்து மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமிருந்து நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய திரைப்பட வாடகைப் பங்களிப்பு ரூபா 26,615,979 மற்றும் திரைப்படக் காட்சிப்படுத்தல் வருமானமாக கிடைக்க வேண்டிய ரூபா 3,532,156 உட்பட மொத்தமாக ரூபா 30,148,135 தொகையான மீதியில் ரூபா 23,297,763 ஆனது 05 வருடங்களுக்கும் மேலாகக் கடந்திருந்த போதிலும், அந்தப் பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு நிதியத்தின் முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திரைப்படக் காட்சிப்படுத்தல் வருமானம் கிடைக்கப் பெறாமையினால் ரூபா 3,532,156 வருமானத்தை அறவிட முடியாமல் போயுள்ளது. திரைப்பட வாடகைப் பங்களிப்பை கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டில் ரூபா 5,000,000 பெற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் அந்தப் பணத்தை அபிவிருத்தி நிதியத்திற்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.	கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற வேண்டிய வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் உடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 135	2024 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பான அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படாத நிலையில், மீளாய்வாண்டில் ரூபா 8,191,868 கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.	நிதிப் பிரமாணம் 135 இற்கு இணங்க, நிதி அதிகாரங்களைப் பகிர்ந்து செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டது.	நிதிப் பிரமாணங்களுக்கு அமையச் செயற்படுதல் வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிட்ட 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2) (இ) இன் கீழ் வழிகாட்டல் 04 இன் 3 ஆம் பிரிவு.	ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் நிதியத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யக்கூடிய வகையில், நிதியத்தின் பிரதான செயற்பாடுகள் குறித்த காலாண்டு அறிக்கைகளை (வங்கி இணக்கக்கூற்றுகள் தயாரிப்பதன் முன்னேற்றம் குறித்த காலாண்டு அறிக்கைகள், வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடைதல் குறித்த அறிக்கைகள், செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைவான காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள்) தயாரித்து, காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் அரச நிதித் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் ஆகியவற்றிற்கு பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்காக அந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போதுள்ள நடைமுறைக்கு இணங்க வேண்டும். அவதானிப்புகள் சரியானவை.	நிதிப் பிரமாணங்களுக்கு அமைய காலாண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு
2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,394,374 ஆன மிகை ஒன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 20,890,342 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,495,968 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் முதலீட்டு வட்டி ரூபா 7,613,222 இனால் குறைவடைந்தமை மற்றும் ஏனைய வருமானங்கள் ஈட்டப்பட்டிராமை ஆகியன முக்கிய காரணமாக இருந்தது

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புகள	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1996 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 946/9 ஆம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 61 வது மற்றும் 05 வது பந்தியின் கீழான கட்டளையில் நிர்வாக சபைக் கூட்டங்கள் எப்படி நடாத்த வேண்டும் எனக் குறிப்பிடப்படாமையால் 2024 ஆம் ஆண்டில் 2 நிர்வாக சபைக் கூட்டங்கள் மட்டும் நடாத்தப்பட்டதுடன், முன்னைய ஆண்டுகளிலும் இதே நிலைதான் இருந்தது. அதன் பிரகாரம், திரைப்பட கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந் நிதியம் நிறுவப்பட்டுள்ள போதும் கட்டுப்பாட்டு சபையினால் திரைப்பட கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக தொடர்ச்சியான பங்களிப்பொன்று வழங்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	அவதானிப்பு சரியானது.	கட்டளைகளை திருத்தம் செய்ய கவனம் செலுத்த வேண்டும்.
(ஆ)	1996 ஒக்தோபர் 24 ஆம் திகதியிட்ட 946/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட, 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 11 ஆம் பிரிவிற்கமைய, காசோலைகள் மூலம் ரூபா 10,000 இனை விஞ்சும் ஏதேனும் தொகையைச் செலுத்துவதற்குப் பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுள் திறைசேரி உண்டியல்களைக்	அவதானிப்பு சரியானது. அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்ட முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையச் செயற்படுதல் வேண்டும்.

கொள்வனவு செய்வதற்காக வ/ப தேசிய சேமிப்பு நிதி முகாமைத்துவ கம்பனிக்கு செலுத்தப்பட்ட ரூபா 8,000,000 மற்றும் 2022 ஆம் ஆண்டு கணக்காய்வுக் கட்டணத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 191,868 ஆகிய தொகைகள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதியத்தினால் மீளாய்வாண்டிற்காக ஈட்டப்பட்டிருந்த வட்டி வருமானம் ரூபா 12,590,472 ஆக இருந்தபோது, நிதியத்தின் பிரதான வருமான மார்க்கமான திரைப்படக் கைத்தொழில் மூலம் ஈட்டப்பட்டிருந்த வருமானம் ரூபா 2,126,326 போன்ற மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. திரைப்படக் கைத்தொழிலின் வீழ்ச்சியும், அக்கைத்தொழிலை மேம்படுத்துவதில் அடிப்படை அவதானத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக பணத்தை முதலீடு செய்திருந்தமையும் இந்நிலைக்குக் காரணமாகியிருந்தது.	அவதானிப்பு சரியானது.	நிதியத்தில் பணத்தை முதலீடு செய்வதற்குப் பதிலாக, திரைப்படக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக பணத்தைச் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் கட்டளைகளின் கீழ் உள்ள பணிகளை நடைமுறைப்படுத்தும் போது, அந்த ஒவ்வொரு பணிகளுக்கும் ஏற்ப தனித்தனியாகத் தயாரிக்கப்பட்ட விதிமுறைகள் அல்லது நடைமுறைகள் இருக்க வேண்டும் என்ற போதிலும், நிதியத்தினால் அத்தகைய விதிமுறைகள் அல்லது நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பணிகள் குறித்து முறையான மதிப்பீடொன்றைச் செய்ய முடியாமல் இருந்தது.	திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் கட்டளைகளுக்காகத் தனித்தனியான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்றாலும், நிதியத்தின் கட்டளைகள் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகைக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையச் செயற்படுதல் வேண்டும்.

(இ) 1993 திசெம்பர் 27 ஆம் திகதியிட்ட 799/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியக் கட்டளையின் 3 ஆம் பிரிவு மற்றும் 1996 ஒக்தோபர் 24 ஆம் திகதியிட்ட 946/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளை இலக்கம் 1 இன் படி, திரையரங்கு நுழைவுச்சீட்டுகள் மீது விதிக்கப்படும் வரிப்பணம் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறிருந்தபோதிலும், 2001 ஒக்டோபர் 30 ஆம் திகதியன்று கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் வெளியிடப்பட்டிருந்த 431 ஆம் இலக்க அலுவலகக் கட்டளையின் இரண்டாம் பந்தியின் மூலம், கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் மொத்த வருமானத்தில் 20 சதவீதத்தை திரைப்பட அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக, திரைப்பட அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய வருமானத்தைக் கணிப்பிடுவதற்கான அடிப்படை யாதென்பது கணக்காய்விற்குத் தெளிவாகாமையினால், நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 26,615,979 பெறுமதியான கிடைக்க வேண்டிய திரைப்பட வாடகைப் பங்களிப்பின் துல்லியத்தன்மையைப் பரிசோதிக்க முடியாமல் இருந்தது.

431 ஆம் இலக்க அலுவலகக் கட்டளையின் கீழ், கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு (ரூபா 3.10) பங்கிலிருந்து, சிங்களத் திரைப்படமொன்றிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் 40 சதத்தில் 20 சதவீதமும், இறக்குமதி செய்யப்படும் திரைப்படங்களிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் ரூபா 3.10 இல் 20 சதவீதமும் கிடைக்கப்பெற வேண்டும். இங்கு மொத்த வருமானமாகக் கருதப்படுவது சிங்களத் திரைப்படங்களிலிருந்து கிடைக்கும் 40 சதமும் இறக்குமதி செய்யப்படும் திரைப்படங்களிலிருந்து கிடைக்கும் ரூபா 3.10 ஆகும். இது தொடர்பாக அலுவலகக் கட்டளையில் தனியாகக் குறிப்பிடப்படவில்லை.

சிங்கள திரைப்பட உற்பத்தியாளருக்கு

சிங்களத் திரைப்படங்கள்	தயாரிப்பாளருக்கு	கூட்டுத்தாபன மொத்த வருமானம்,	20 %
3.10	2.70	0.40	0.08
இறக்குமதித் திரைப்படங்கள்			
3.10		3.10	0.62

வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கு அமையச் செயற்படுதல் வேண்டும்.

(ஈ)	1996 ஒக்தோபர் 24 ஆம் திகதியிடப்பட்ட 946/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 61 ஆம் மற்றும் 05 ஆம் பிரிவுகளின் கீழான (4) (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ) மற்றும் (ஓ) ஆகிய கட்டளைகளுக்கமைய பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	முகாமைத்துவத்தால் சட்டத்தின் கட்டளைகளுக்கமைய நிதியத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
i.	தேசிய திரைப்படதொழிலுக்கு அவசியமான உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்கள் வழங்குவதற்கு மற்றும் உள்நாட்டு ரீதியாக திரைப்படங்கள் தயாரிப்பதற்கு ஆதரவு மற்றும் பக்கபலம் வழங்கல்	-மேற்படி-	-மேற்படி-
ii.	பார்வையாளர்ளின் மற்றும் திரையரங்குகளில் ஊழியர்களின் வசதிகள் மற்றும் அணுகுவதற்குத் தேவையான வசதிகளை திரையரங்குகளினால் வழங்குவதை உறுதிப்படுத்தல்.	-மேற்படி-	-மேற்படி-
iii.	திரைப்படத் தொழிலின் ஏனைய பிரிவுகளையும் மேம்படுத்தல்	-மேற்படி-	-மேற்படி-
iv.	திரையரங்குகளில் வசதியான இருக்கைகளை வழங்குதல் மற்றும் பார்வையாளர்களின் தேவைக்கேற்ப வசதிளையும் மேம்படுத்தல்	-மேற்படி-	-மேற்படி-
v.	திரைப்படங்களின் உயர் தரத்தை உறுதிப்படுத்தல், அவற்றின் தயாரிப்பு மற்றும் கண்காட்சிக்குத் தேவையான உபகரணங்களை வழஙகுதல்.	-மேற்படி-	-மேற்படி-

vi.	நிர்வாக சபையினால் தீர்மானிக்கப்படும் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் திரைப் படத்துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கான உதவித் தொகை அல்லது பயிற்சித் திட்டங்களை ஏற்படுத்தல்.	-மேற்படி-	-மேற்படி-
vii.	உயர் தரத்திலான கலைத் திரைப்படங்களை முழுமையாகத் தயாரிப்பதற்கு அல்லது நிர்வாக குழுவினால் நியமிக்கப்பட்ட திரைக்கதை மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திரைக் கதைகள் அல்லது அத்தகைய திரைப் படங்களைத் தயாரிக்கும் நோக்கில் விசேட உபகரணங்களை வாடகைக்கு எடுப்பதற்கு இயக்குனர்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் திரைப் படங்களின் தரத்தை ஊக்குவித்தல் வேண்டும்.	-மேற்படி-	-மேற்படி-
viii.	05 வருடங்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலப் பகுதியில் உள்ளூர் திரைப் படத் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் பத்து திரைப் படங்களுக்குக் குறையாது தயாரித்து முடித்த தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் கடன் வழங்குதல்.	-மேற்படி-	-மேற்படி-
ix.	திரையரங்குகளை மேம்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்துவதற்கும் புதிய உபகரணங்களைப் பொருத்துவதற்கும் கடன் வழங்குதல்.	-மேற்படி-	-மேற்படி-
x.	உற்பத்தி பிரிவினால் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளைப் பரிசீலித்தல்.	-மேற்படி-	-மேற்படி-
xi.	உயர் தரமான படங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கல்.	-மேற்படி-	-மேற்படி-

4. கணக்களின் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புகள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 15.1 ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) (இ) மற்றும் (ஈ) பிரகாரம் நிதியத்தினால் மீளாய்வாண்டுக்காக பாதீட்டினை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது நிதியத்தின் செலவுகளை மேற்கொண்டிருந்தது	அவதானிப்புகள் சரியானது ஆகும்.	நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு இன்றி எந்தச் செலவும் மேற்கொள்ளலாகது.